அ.வ.எண். 60/2017 நாள்: 17.02.2026

பி.சா.1 திரு. சதாசிவம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவா சொத்து கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றால் கோவில் பெயரில் உள்ளது. எத்தனை இன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 இன சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2, 3 பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றால் 2ஆம் பிரதிவாதி எனது அண்ணன், 3ஆம் பிரதிவாதி எங்களது ஊரை சேர்ந்தவர். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைக்கு நான் தகவல் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு குத்தகை பதிவு எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். மேற்படி குத்தகை பதிவு சம்மந்தமாக எந்த ஒரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்திற்கு நான் குத்தகை செலுத்தியதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், குத்தகை ரசீது கொடுப்பதில்லை. 2ஆம் பிரதிவாதி அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். எந்த கிளையில் பணியாற்றினார் என்றால் மருதுபாண்டியர் போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். தற்போது தாவா சொத்து கருவை காடாக உள்ளது என்றால் சரிதான்.

வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Sathasivam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.17 19:04:28 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU